# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in

**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 52/2016**

திரு. A.S.C. அருண்குமார்,
த/பெ. எஸ். சந்திரசேகரன்,
20/7, இராசப்ப முதலியார் வீதி,
ஆனைமலை – 642 104. . . . . . மனுதாரர்
(திரு. A.S.C. அருண்குமார்)

எதிர்

செயற்பொறியாளர் (இ&/ப) ,
அங்கல குறிச்சி,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வளாகம்,
110/22, கே.வி.துணை மின் நிலைய வளாகம்,
வால்பாறை மெயின் ரோடு,
அங்கல குறிச்சி – 642 007 . . . . எதிர்மனுதாரர்
(திரு. C. சதீஸ்குமார், செயற்பொறியாளர்/அங்கலகுறிச்சி)

**கேட்புரை நாள்: 23–9–2016**

**ஆணை நாள்: 7–10–2016**

திரு. A.S.C. அருண்குமார், த/பெ. சந்திரசேகரன், ஆனைமலை அவர்களின் 30–6–2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.52/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை 23–9–2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவில் உள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து, மின் குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது/

## ஆணை

### 1. மேல் முறையீட்டாளரின் கோரிக்கை

மேல் முறையீட்டாளர், தனக்கு பிறகு பதிவு செய்த திரு.ஜி.பிரபுராம் அவர்களுக்கு 22–9–2010 அன்று மின் இணைப்பு முன்னுரிமை மீறி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவருடைய விண்ணப்பத்திற்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை தனக்கு ஒரு நல்ல தீர்வு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

### 2. வழக்கின் சுருக்கம்

2.1 மேற்முறையீட்டாளரின் தந்தை விவசாய மின் இணைப்பு கோரும், விண்ணபத்தை பதிவு செய்துள்ளார். அந்த விண்ணப்பத்தின் பதிவு எண்.164/08–09 நாள் 24–9–2008. மேற்கண்ட விண்ணப்பம், திரு. A.S.C. அருண்குமாரின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது.

2.2 மேற்கண்ட விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணபம் சுயநிதி திட்டம் ரூ.25,000/– மற்றும் சுயநிதி திட்டம் ரூ.50,000/– ஆகிய இரண்டிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.3 மேற்கண்ட விண்ணபத்திற்கு பிறகு 14–11–2008 பதிவு செய்யப்பட்ட திரு.ஜி.பிரபுராம், த/பெ.கணபதி அவர்களுக்கு, ரூ.50,000/– சுயநிதி திட்டத்தின் கீழ் மின் இணைப்பு 22–9–2010ல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் வரை, மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

2.4 உடுமலைபேட்டை மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சுயநிதி திட்டம் ரூ.50,000/– வரிசையில் 22 விண்ணப்பங்களுக்கு மதிப்பீடு தயார் செய்து அங்கலக்குறிச்சி கோட்ட வரிசையில் மதிப்பீடு தொகை செலுத்த அறிவிப்பு வழங்கவும், பணம் செலுத்தும் முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வாரிய விதிகளுக்கு உட்பட்டு வழங்குமாறு தீர்வு செய்துள்ளது.

2.5 மேற்கண்ட தீர்வில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்பித்துள்ளார்கள்.

### 3. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்:

3.1 மேல்முறையீட்டாளர் கோவை மாவட்டம், பொள்ளாச்சி தாலுக்கா, ஆனைமலை கிராமத்தை சார்ந்த விவசாயி ஆவார். அவர் விவசாயத்திற்காக இலவச மின் இணைப்பு வேண்டி கடந்த 2008

ஆம் ஆண்டு சுயநிதித்திட்டத்தின் கீழ் ரூ.50,000/– மற்றும் ரூ.25,000/– திட்டத்தில் பதிவு செய்து இருந்தார். அவருக்கு இன்று வரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

3.2 அவருக்கு பின்பு பதிவு செய்து இருந்த ஜி. பிரபுராம் (பதிவு எண்–236/2008–2009, நாள் 14–11–2008) என்பவருக்கு 22–9–2010 அன்று மின் இணைப்பு முன்னுரிமை மீறி வழங்கப்பட்டது. இது தொடர்பாக அனைத்து மின்வாரிய அதிகாரிகளையும் நேரிலும் கடிதம் மூலமாகவும் மற்றும் தொலைபேசியிலும் அவர் நிலையை எடுத்து கூறியும், யாரும் அவரை பொருட்படுத்தவில்லை.

3.3 அவர் குறை தீர்க்க 6–2–2016 அன்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மனு செய்தார். எந்த அதிகாரி தன் சுயநலத்திற்காக முன்உரிமை மீறி மற்றவர்களுக்கு மின் இணைப்பு வழங்கினாரோ அவருக்கே அவரது விண்ணப்பம் அனுப்பப்பட்டது. அவரே மீண்டும் அவரை விசாரணை செய்தார். அப்படி செய்யும் போது பாதிக்கப்பட்ட அவருக்கு எப்படி நியாயம் கிடைக்கும். தீர்ப்பு அவர்களுக்கு சாதகமாக பதிவு செய்து அவருக்கு பதில் அனுப்பியுள்ளார். மன்ற கூட்டத்தில் பேசிய செய்திக்கும் அவருக்கு அனுப்பப்பட்ட ஆணைக்கும் எந்த தொடர்பும் இல்லை.

3.4 அவரது விண்ணப்பம் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளதா? இல்லையா ? முன் உரிமை மீறப்பட்டு திரு.ஜி.பிரபுராம் மற்றும் அவருடன் பலருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா? இல்லையா? அதுவும் 1.5 ஏக்கர் பூமிக்கு 10 HP மின் இணைப்பு வழங்கப்பட்டது சரியா? தவறா? இதற்கு பதில் இல்லை. அவருக்கு எப்போது மின் இணைப்பு வழங்கப்படும் என்பதும் தெரியவில்லை.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்</u>

4.1 மனுதாரர் திரு.A.S.C. அருண்குமார், த/பெ. சந்திரசேகரன், ஆனைமலை அவர்களின் தந்தை திரு.சு.சந்திரசேகரன் என்பவர் பெயரில் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் விண்ணப்ப பதிவு எண்.164/2008–2009 நாள் 24–9–2008 ன்படி இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், சுயநிதி திட்டம் ரூ.25,000/– மற்றும் ரூ.50,000/– திட்டங்களில் இவ்விண்ணப்பத்தை சேர்க்கக்கோரி ரூ.500/– வீதம் 24–9–2008 மற்றும் 27–9–2008 தேதிகளில் மனுதாரர் ஆய்வு கட்டணம் செலுத்தியுள்ளார். ரூ.500/–செலுத்தியதற்கான இரசீது எண்கள் 747291, நாள் 24–9–2008 மற்றும் 747299, நாள் 27–9–2008 என்பதை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

4.2 மனுதாரரின் தந்தை 24–9–2008 தேதியில் ரூ.500/– செலுத்தியதை கொண்டு இவ்விண்ணப்பத்தை சுயநிதி திட்டம் ரூ.25,000/– திட்டத்தில் நிலுவையில் வைக்கப்பட்டிருந்தது என்பதை பணிந்து சமர்ப்பிக்கிறார்.

4.3 கடந்த 19–1–2009 அன்று 31–12–2008 வரையிலான சுயநிதி திட்டம் ரூ.50,000/– திட்டத்தில் 179 விண்ணப்பங்கள் இக்கோட்டத்தில் அப்போதைய செயற்பொறியாளர்/ இபே / அங்கலக்குறிச்சி அவர்களால் விடுவிக்கப்பட்டபோது இம்மனுதாரருடைய விண்ணப்பம் சுயநிதி திட்டம் ரூ.25,000/– திட்டத்தில் நிலுவையில் இருந்ததால் இவரது விண்ணப்பம் விடுவிக்கப்படவில்லை. விடுவிக்கப்பட்ட 179 விண்ணப்பங்களில் ஒருவர் தான் மனுதாரர் மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள திரு.ஜி.பிரபுராம் (பதிவு எண்.236/2008–2009 நாள் 14–11–2008) இவ்விண்ணப்பதாரருக்கு 22–9–2010 அன்றுமின்இணைப்பு வழங்கப்பட்டது உண்மைதான் என்பதையும் அவருடன் சேர்த்து மொத்தமாக 45 விவசாய மின் இணைப்புகள் இத்தேதிவரை வழங்கப்பட்டுள்ளன என்பதை பணிந்து சமர்ப்பிக்கின்றேன். இது மின்வாரியத்தில் உள்ள சாதாரண நடைமுறைதான் என்பதையும் திரு.ஜி. பிரபுராம் என்பவருக்கு விதிமுறை மீறி மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்பதையும் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

4.4 மனுதாரர் தனது தந்தை திரு.சு.சந்திரசேகரன், என்பவர் பெயரிலிருந்து திரு.A.S.C. அருண்குமார் என்ற மனுதாரர் பெயருக்கு உரிய முறையில் மனு செய்து 27–3–2012 தேதியில் பெயர் மாற்றம் பெற்றுள்ளார். மனுதாரர் திரு.A.S.C. அருண்குமார் அவர்கள் உரிய முறையில் மனு செய்து கடந்த 27–6–2012 தேதியில் ஆழ்குழாய் கிணற்றுக்கான விண்ணப்பத்தை திறந்தவெளி கிணற்றுக்கான விண்ணப்பமாக மாற்றம் செய்துள்ளார். மனுதாரரின் கோரிக்கையை ஏற்று சுயநிதி திட்டம் ரூ.25,000/– திட்டத்திலிருந்து விண்ணபத்தை சுயநிதி திட்டம் ரூ.50,000/– திட்டத்திற்கு மாற்றம் செய்து கடந்த 24–12–2014 தேதியில் அப்போதைய செயற்பொறியாளர் / இபே / அங்கலக்குறிச்சி அவர்களால் விடுவிக்கப்பட்டது. ஆனால் அவ்வருடத்தில் அரசு குறியீடு போதுமான அளவாக இல்லாத காரணத்தால் அவருக்கு அவ்வருடத்தில் மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்பதை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

4.5 மனுதாரரின் 19–8–2015 மற்றும் 25–9–2015 தேதியிட்ட புகார் மனுக்களுக்கு மற்றும் அவர் அளித்த புகார் மனுக்களுக்கு உரிய பதில் அளிக்கப்பட்டுள்ளது நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, அனைத்து மின்வாரிய அதிகாரிகளையும் நேரிலும் கடிதம் மூலமாகவும் மற்றும்

தொலைபேசியிலும் தன் நிலையை எடுத்து கூறியும், யாரும் பொருட்படுத்தவில்லை என்பது உண்மைக்கு புறம்பானதாகும் என்பதையும் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

4.6 மின்வாரியத்தில் முறையே மின்இணைப்பு கோரும் விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு வரிசை அடிப்படையில் விண்ணப்பதாரரின் நிலை பாராமல் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு மின்இணைப்புகள் விதிமுறைப்படி வழங்கப்படுகிறது.

4.7 உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற மனு எண்.09/2015–16ன் மீது நடத்தப்பட்ட கூட்டத்தின் செயல்முறைகள்ஆணை நாள் 3–6–2016ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு மனுதாரர் விண்ணப்பத்தின் பேரில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு சுயநிதி திட்டம் ரூ.50,000/– திட்டத்தில் மதிப்பீடுகள் தயார் செய்து மனுதாரருக்கு மதிப்பீட்டு தொகை செலுத்தும் பொருட்டு உரிய அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை பணிந்து சமர்ப்பிக்கின்றேன். மனுதாரர் மதிப்பீட்டு தொகை செலுத்தும் பட்சத்தில் மின்பாதைகள் அமைத்து விவசாய மின்இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும் என்பதையும் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

5. <u>மின்குறை தீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும் எதிர் மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக, 23–9–2016 அன்று மின் குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 மேல்முறையீட்டாளர் திரு. A.S.C. அருண்குமார், அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

5.3 எதிர்மனுதாரர் திரு.சி.சதீஸ்குமார், செயற்பொறியாளர் அங்கலகுறிச்சி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

6.1 மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.2 மேல் முறையீட்டாளர் 6–8–2016 அன்று தனக்கு விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார். மேலும், அதற்கான சோதனை தாள்களின் நகலையும் சமர்பித்தார்.

6.3 மேல்முறையீட்டாளர் அவர் 25,000/– சுயநிதி திட்டத்திலும் ரூ50,000/– சுயநிதி திட்டத்திலும் ரூ.500/– செலுத்தி பதிவு செய்துள்ளதாக தெரிவித்து அந்த ரசீதுகளின் நகல்களையும் சமர்பித்தார்.

6.4 தனக்கு பிறகு விண்ணபத்தை பதிவு செய்த ஜி.பிரபுராம் அவர்களுக்கு மின் இணைப்பு 22–9–2010 ல் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, அவரின் முன்னுரிமைப்படி மின் இணைப்பு வழங்கப்பட்டு இருந்ததால் மேற்கண்ட நாளுக்கு முன்பாகவே அதன் மின் இணைப்பை பெற்று அவருடைய விவசாயத்தை சிறப்பாக செய்து இருக்க முடியும். அவரின் விண்ணபத்தில் ரூ.50,000/– சுயநிதிதிட்டத்தின் பதிவின் முன்னுரிமைப்படி மின் இணைப்பு வழங்காததால், அவருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை வாரியம் ஈடு செய்ய உத்தரவு இட வேண்டும் என்றும் வாதிட்டார்.

6.5 மேலும் தனக்கு 2010ஆம் ஆண்டில் மின் இணைப்பு வழங்கியிருந்தால் அப்பொழுது உள்ள மதிப்பீடு தொகைதான் செலுத்த வேண்டியது இருக்கும். ஆனால் தற்பொழுது உள்ள cost dataவின் படி மதிப்பீடு தயார் செய்துள்ளதால் அவர் அதிகமான மதிப்பீடு தொகையை செலுத்தியுள்ளதாகவும், உரிமம்தாரரின் தவறினால் தான் அவர் அவ்வாறு அதிகம் மதிப்பீடு தொகை செலுத்த வேண்டிய நிலை வந்துள்ளதால், அவரின் முன்னுரிமைப்படி மின் இணைப்பு வழங்கியிருந்தால் அவர் செலுத்த வேண்டிய மதிப்பீடு தொகையை கணக்கீடு செய்து தற்பொழுது அவர் செலுத்தியுள்ள மதிப்பீட்டுத்தொகையில் அவர் அதிகமாக செலுத்தியுள்ள தொகையை அவருக்கு திரும்ப வழங்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

7. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு.சி. சதீஸ்குமார், செயற்பொறியாளர், அங்கலக்குறிச்சி அவர்கள் தன்னுடைய பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

7.2 மேல்முறையீட்டாளர் ரூ.25000/– சுயநிதி திட்டத்தில் பதிவு செய்வதற்காக 24–9–2008 அன்று ரூ500/– செலுத்தியுள்ளதாகவும் மேலும் ரூ.50,000/– சுயநிதி திட்டத்தில் பதிவு செய்வதற்காக 27–9–2008 ரூ.500/– செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

7.3 மேல் முறையீட்டாளரின் விவசாய விண்ணபத்திற்கு 6–8–2016 அன்று மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்தார்.

7.4 செயற்பொறியாளர் அவர்கள் விண்ணப்பதாரரின் விண்ணபத்தில் கோரியுள்ள மின்பளுவிற்கு ஏற்ப மின்பளு அனுமதிக்கப்படுகிறது. எனவே 1.5 ஏக்கர் நித்திற்கு 10 HP அனுமதிக்கக் கூடாது என்ற விதிகள் எதுவும் இல்லை என்றும் வாதிட்டார்.

7.5 மதிப்பீடுகள், வாரியத்தில் அமலில் உள்ள cost-data வின்படி தயாரிக்கப்பட்டுள்ளது. தளவாட சாமான்களின் விலை பணவீக்கத்திற்கு தகுந்தாற்போல் மாறியிருக்கும். அதுபோல் பணத்தின் மதிப்பிலும் மாற்றம் இருக்கும் என்றும் வாதிட்டார். மேலும், மின் இணைப்பு வழங்குவதற்காக மதிப்பீடு தயாரிக்கும் காலத்தில் அமலில் உள்ள cost data படிதான் மதிப்பீடு செய்யப்பட்டு மேல் முறையீட்டாளரிடம் மதிப்பீட்டுத் தொகை வசூல் செய்யப்பட்டுள்ளதால், மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மதிப்பீட்டு தொகையில் உள்ள வித்தியாசத்தை திரும்ப தர வேண்டும் என்பது ஏற்புடையது அல்ல என்றும் வாதிட்டார்.

## 8. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

8.1 மேல் முறையீட்டாளர் தனக்கு பிறகு விவசாய மின் இணைப்பு கோரி 14–11–2008 அன்று ரூ.50,000/– சுயநிதி திட்டத்தில் பதிவு செய்யப்பட திரு.ஜி.பிரபுராம் அவர்களுக்கு 22–9–2010 ல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 24–9–2008 ல் பதிவு செய்யப்பட்ட தன்னுடைய விண்ணப்பத்திற்கு இதுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்று தெரிவித்து தனக்கு நியாயம் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

8.2 எதிர்மனுதாரர் உடுமலை மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் ஆணையின்படி, மதிப்பீடு சுயநிதி திட்டம் ரூ.50,000/– திட்டத்தில் மதிப்பீடு தயார் செய்து, மதிப்பீட்டு தொகையை மேல் முறையீட்டாளர் செலுத்திவிட்டதால், 6–8–2016 அன்று விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார். மேல்முறையீட்டாளரும், தனக்கு மின் இணைப்பு 6–8–2016 அன்று வழங்கப்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார். எனவே மேல் முறையீட்டாளான் கோரிக்கையான விவசாய மின் இணைப்பு அவருக்கு வழங்கப்படவேண்டும் என்பது நிறைவேறிவிட்டது.

மேல்முறையீட்டாளர், மின் இணைப்பு அவருக்கு பிறகு விண்ணப்பத்தை பதிவு செய்துள்ள ஜி.பிரபுராம் அவர்களுக்கு 22–9–2010 ல் மின் இணைப்பு வழங்கியுள்ளதால் தனக்கு மின் இணைப்பு 6 வருடங்கள் தாமதமாக வழங்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நஷ்டத்திற்கு மின்சார வாரியம், உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும், 2010 ஆம் ஆண்டு மதிப்பீடு தயார் செய்து, தனக்கு மின் இணைப்பு வழங்கியிருந்தால், அப்பொழுது உள்ள cost data வின்படி மதிப்பீடு தற்பொழுது கணக்கீடு செய்ததை விட குறைவாகத்தான் இருக்க முடியும். எனவே அவ்வாறு செய்யாமல், தற்பொழுது உள்ள மதிப்பீட்டின்படி, அவரிடம் தொகை

வசூலிக்கப்பட்டுள்ளதால், அவரிடம் அதிகமாக வசூலிக்கப்பட்ட தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

8.3 மேற்கண்ட இரண்டு கோரிக்கைகளும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் சமர்பிக்கப்படாத கோரிக்கைகள் ஆகும். மேலும், முறையீட்டாளரது மேல்முறையீட்டு மனுவிலும் அக்கோரிக்கைகள் இடம் பெறவில்லை. மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரையின்பொழுதுதான் இக்கோரிக்கைகள் எடுத்துரைக்கப்பட்டன.

8.4 இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சாரகுறை தீர்ப்பாளருக்கான விதி 17 4(a) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“ 17(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமம்தாரர், குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.”*

8.5 மேற்கண்ட விதியை கூர்ந்துபடிக்கும் பொழுது நாம் அறிவது, முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன் முறையீட்டில் குறிப்பிட்ட உரிமம்தாரரின் மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்து, முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும் அல்லது முறையீடு செய்து 50 நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளர் மன்றத்தின் பதில் திருப்தி இல்லாமல் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

8.6 மேற்கண்ட இரண்டு கோரிக்கைகள் மன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை, மேலும் அவை ஒரு பொதுத் தன்மையான முறையீடுகளும் அல்ல. மின்குறைதீர்ப்பாளர் ஒரு மேல் முறையீட்டு அலுவலர் ஆவார். எனவே, மேல்முறையீட்டாளரின் மேற்கண்ட கோரிக்கைகள் மன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை என்பதால், மின்குறை தீர்பாளரால், மேற்கண்ட கோரிக்கைகள் தீர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 9. <u>முடிவுரை</u>

9.1 மேல்முறையீட்டாளருக்கு 6–8–2016 அன்று விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதால் மேல் முறையீட்டாளரின் கோரிக்கையான அவருடைய விண்ணப்பத்திற்கு விவசாய மின் இணைப்பு வழங்க வேண்டும் என்பது நிறைவேறிவிட்டது.

9.2 மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான நஷ்டஈடு மற்றும் மதிப்பீட்டு தொகை 2010 ல் உள்ள cost dataன் படி கணக்கீடு செய்யப்பட்டு, அவரிடம் அதிகமாக பெறப்பட்ட மதிப்பீட்டு தொகையை திரும்ப வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள், மன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் தீர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

9,3 மேற்கண்ட தீர்வுடன் மேல் முறையீட்டு மனு எண்.52/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. A.S.C. அருண்குமார்,
த/பெ. எஸ். சந்திரசேகரன்,
20/7, இராசப்ப முதலியார் வீதி,
ஆனைமலை – 642 104.

2) செயற்பொறியாளர் (இ&/ப),
அங்கல குறிச்சி,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வளாகம்,
110/22, கே.வி.துணை மின் நிலைய வளாகம்,
வால்பாறை மெயின் ரோடு,
அங்கல குறிச்சி – 642 007.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
உடுமலைப்பேட்டை மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எரிப்பாளையம், திருப்பூர் ரோடு,
உடுமலைப்பேட்டை – 642 126.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.